**OS.NO. 83/2011 PW-1**

நாள் : 03.03.2025

பெயர் : சந்திராயன்

த/பெ : பாலசுந்தரம்

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நீங்கள் தாக்கல் செய்த தாவாப்படி, தாவாவுடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் படி உங்கள் வீடு, ராணி, சிவகாமி, ராஜேந்திரன் ஆகிய வீடுகளுக்கு பின்னால் வடக்கு பக்கமாக பொது வழி செல்கிறது என்பது தான் வழக்கு என்றால் ஆமாம். ராஜேந்திரன் த/பெ தியாகராஜன் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம் அவர் தான் ஓடிவிட்டார். ராஜேந்திரனும் நீங்களும் நல்ல முறையில் தான் பேச்சு வார்த்தை வைத்துள்ளீர்கள் என்றால் இல்லை. நீங்களும் ராஜேந்திரனும் பரஸ்பர குடும்ப நிகழ்சிகளில் கலந்து வருகிறீர்கள் என்றால் இல்லை.

வ.சா.ஆ.10 ஆவணம் எந்த காரணத்திற்காக வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இராணி என்பவருக்கும் பொது வழியில் நான்கில் ஒரு பாகம் இருக்கிறது என்பதை காண்பிக்க தான் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வ.சா.ஆ.10 ல் கண்டுள்ள அயிட்டம் 1 சொத்தின் செக்குபந்திகளை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்றால் ஆமாம். வ.சா.ஆ.10 ல் கண்டுள்ள அயிட்டம் 2 சொத்தின் செக்குபந்திகளும் சரியாக தான் உள்ளது என்றால் ஆமாம். வ.சா.ஆ.10 ல் கண்டுள்ள அயிட்டம் 3 சொத்தின் செக்குபந்திகளும் சரியாக தான் உள்ளது என்றால் ஆமாம். வ.சா.ஆ.10 ல் கண்டுள்ள அயிட்டம் 4 சொத்தின் செக்குபந்திகளும் சரியாக தான் உள்ளது என்றால் ஆமாம்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தன்னால் தயார் செய்யப்பட்ட வரைபடத்தை காண்பித்து அதில் கண்டுள்ள செக்குபந்திகள் வ.சா.ஆ.10 ல்

கண்டுள் 4 அயிட்ட சொத்தின் செக்குபந்திகளும் ஒன்றாக தான் உள்ளது என்பதை பதிவு செய்கிறார். **வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் அந்த வரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகிறது.** உங்கள் தரப்பு வரைபடத்தின் படி ராணி வீட்டின் மூன்று வீடு தள்ளி மேற்கு பக்கத்தில் தான் உங்கள் வீடு அமைந்துள்ளது என்றால் ஆமாம். ராணி, சிவகாமி மற்றும் ராஜேந்திரன் வீட்டிற்கு பின் பக்கமாக பொது சந்து (வடக்கு பக்கமாக) அமைந்துள்ளது என்பதை காண்பிக்க வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதற்கான அவசியம் இதற்கு முன்பாக எனக்கு எழவில்லை.

வ.சா.ஆ.10 ன் முன்னிலைக்கு ராணி, சிவகாமி மற்றும் ராஜேந்திரன் இவர்களது வீட்டிற்கு பின் பக்கத்தில் (வடக்கு பக்கமாக) உங்கள் வீட்டிற்கு செல்ல எந்த வித வழியும் கிடையாது என்றால் சரியல்ல. என் ஆவணத்தின் படி பின் பக்கமாக பொது வழி உள்ளது. எனவே நீங்கள் தாக்கல் செய்த தாவா நிலைக்கத்தக்கதல்ல எனவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU Digitally signed by NAVEEN DURAIBABU
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.